**சுருக்கம்**

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – 2023-2024 – அறிவிப்புகள் – செவி மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் சைகை மொழிப்பெயர்ப்பாளர் பயிற்சியினை வழங்குவதற்கு ரூ.15.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–1.1)த் துறை**

அரசாணை (நிலை) எண். 15

நாள்: 21.06.2023,
சோபகிருது, ஆனி – 6,
திருவள்ளுவர் ஆண்டு, 2054.

படிக்கப்பட்டது :

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பு நாள் 17.04.2023.
2. மாற்றுத்திறனாளிகள் நல ஆணையரின் ந.க. எண். 3223/சிப-1/2023, நாள் 11.05.2023.

******

**ஆணை:**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், 2023-2024-ஆம் ஆண்டிற்கான மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் போது, 17.04.2023 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்னபிறவற்றுடன் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டார்:-

> **"செவி மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் ஒரு தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் வாயிலாக சைகை மொழிப்பெயர்ப்பாளர் பயிற்சியினை வழங்க ஏதுவாக ரூ.15.00 இலட்சம் மதிப்பில் திட்டம் செயல்படுத்தப்படும்".**

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக, திருநெல்வேலி, சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி) தென் மாவட்டங்களில் சைகை மொழிப்பயிற்சி கூடங்கள் (Diploma in sign language) மிகக் குறைவாக உள்ளதால் அதற்கான பயிற்சி வகுப்புகளை பெண்களுக்காக அந்நிறுவனம் தொடங்க உள்ளது எனவும், இந்த பயிற்சிக்கு தேவையான அனைத்து வசதிகளும் அவர்கள் கல்லூரி வளாகத்திற்குள் ஏற்கனவே இருப்பதால் பயிற்சிக் காலம் 2 வருடம் துவங்குவதற்கு விருப்பம் தெரிவித்து அனுமதியளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. மேலும், Rehabilitation Council of India (RCI) அங்கீகாரம் பெற்று வரும் பட்சத்தில் மேற்காணும் இந்நிறுவனத்திற்கோ அல்லது இதர நிறுவனத்திற்கோ தகுதியின் அடிப்படையில் கீழ்க்காணும் விவரப்படி ரூ.15.00 இலட்சம் செலவில் இப்பயிற்சி வழங்க நடவடிக்கை மேற்கொள்ளலாம் எனவும் இதில் முதல் வருடத்திற்கான தொடர் செலவினம் மற்றும் தொடராச் செலவின விவரம் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:-

**தொடர் செலவினம்**

| | | |
|---|---|---|
| சைகைமொழி சிறந்த பயிற்சியாளர் (Master Trainer) | 2 ஆசிரியர்கள் X 25000 வீதம் X 11 மாதங்கள் | ரூ. 5,50,000 |
| சைகை மொழி பயிற்சியாளர் | 2 ஆசிரியர்கள் X 20000 வீதம் X 11 மாதங்கள் | ரூ. 4,40,000 |
| சைகை மொழிப் பாடத்திற்கான புத்தகங்கள் மற்றும் எழுதுப் பொருட்கள் செலவினம் (Stationary) | | ரூ. 1,10,000 |
| **தொடராச் செலவினம்** | | |
| மின்னணு உபகரணங்கள் வீடியோ கேமரா, புர ஜெக்டர் (Portable Hard drive for data Storage Computer with Internet and Printer etc.,) | | ரூ. 4,00,000 |
| **மொத்தம்** | | **ரூ. 15,00,000** |

மேலும், இத்திட்டம் செயல்படுத்துவதற்கான ரூ.15.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணை வழங்குமாறு அரசிடம் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகள் நல ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு, அதனை ஏற்று, செவி மாற்றுத்திறனாளிகள் பயனடையும் வகையில் திருநெல்வேலி மாவட்டம் சாராள் தக்கர் கல்லூரி (தன்னாட்சி) மூலம் சைகை மொழிப்பெயர்ப்பாளர் பயிற்சி வழங்க ரூ.15,00,000/- (ரூபாய் பதினைந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி-3ல் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள தொகை கீழ்க்காணும் புதிய கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:-

> **"2235 – சமூகப் பாதுகாப்பும் நலனும் – 02 சமூக நலன் – 101 – மாற்றுத்திறனாளிகள் நலன் – NR தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் மூலம் சைகை மொழிப்பெயர்ப்பாளர் பயிற்சி அளித்தல் – 309 – உதவித்தொகை – 03 குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித்தொகை"**
> (IFHRMS த.தொ.கு. 2235 – 02 – 101 – NR – 30903)

5. மேலே பத்தி-3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுப்பணி" (New Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொ-1) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா

செலவின நிதி விதிகள் 1963-ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வ.செ.பொது.I)த் துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2023-2024-ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (வ.செ.பொது.I/சந)த் துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேற்கண்ட புதிய கணக்குத் தலைப்பிற்கு மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் அவர்கள் மதிப்பீடு, கணக்கு நேரமைப்பு மற்றும் கட்டுப்பாட்டு அதிகாரியாவார்.

7. மேற்படி, புதிய கணக்குத் தலைப்பை தங்களது பதிவேடுகளில் துவக்கி வைக்குமாறு சம்பந்தப்பட்ட கருவூல அலுவலர் / சம்பளக் கணக்கு அலுவலர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அலுவல் சாரா எண்.24038/நிதி(சந)/2023, நாள் 20.06.2023-இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண்.334 (முந்நூற்று முப்பத்தி நான்கு) (IFHRMS ASL No.2023060334).

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**இரா. ஆனந்தகுமார்,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை-5.
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள்.
(மாற்றுத் திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
மாநிலக் கணக்காயர், சென்னை-18.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர், சென்னை-35.

**நகல்**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9
செயலரின் தனிச் செயலாளர்,
மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, சென்னை-9.
நிதித் (ச.ந/வ.செ.பொது-I,II/வ.வ.I)துறை, சென்னை-9.
திட்டம் வளர்ச்சி (ம) சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை-9.
இருப்பிட தணிக்கை அலுவலர், சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர் 22/6/23
22/6/23